SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com

# மாலை எக்ஸ்பிரஸ்

விசுவாவசு வருடம் சித்திரை 14 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 ஷவ்வால் 28
மாநிலம் பயனுற!

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

/maalaiexpressnews
● புதுச்சேரி ● ஞாயிற்றுக்கிழமை, ஏப்ரல் 27, 2025 ● வெளியூர்: 28-4-2025, திங்கள்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 282 ● 8 பக்கம் ● ரூ.6

# இந்தியர்களின் ரத்தம் கொதிக்கிறது

# பஹல்காம் தாக்குதல் பயங்கரவாதிகளுக்கு கடுமையான பதிலடி கொடுக்கும்

## மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரை



**புதுடெல்லி, ஏப். 27-**

பிரதமர் மோடி மாதம் தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் மனதின் குரல் எனும் நிகழ்ச்சியில் உரையாற்றி வருகிறார். அந்த வகையில் இன்று மன் கி பாத் எனப்படும் மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: பஹல்காம் பயங்கரவாத தாக்குதலால் ஒவ்வொரு இந்தியரின் ரத்தமும் கொதிக்கிறது. ஜம்மு காஷ்மீர் வேகமாக வளர்ச்சியடந்து வருவதை நமது எதிரிகள் விரும்பவில்லை. அமைதி திரும்ப தொடங்கிய நேரத்தில், வளர்ச்சி பொறுக்காமல் காஷ்மீரை அழிக்க நினைக்கிறார்கள். பயங்கரவாத தாக்குதலுக்கு எதிராக, ஒரு தேசமாக நாம் வலுவான மன உறுதியை வெளிப்படுத்த வேண்டும். பஹல்காம் தாக்குதல் கோழைத்தனமானது.

பயங்கரவாத தாக்குதலுக்கு நாடு முழுவதும் ஒரே குரலில் பேசுகிறது. காஷ்மீர் அழிக்கப்பட வேண்டும் என்று பயங்கரவாதிகளும், பயங்கரவாதத்தின் மூளையாக செயல்பட்டவர்களும் விரும்புகிறார்கள். பயங்கரவாதத்திற்கு எதிரான போரில், 140 கோடி இந்தியர்களின் ஒற்றுமையே நமது மிகப்பெரிய பலம். பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் உலக நாடுகள் இந்தியா பக்கமே பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி கிடைக்கும். பஹல்காம் தாக்குதல் பயங்கரவாதிகளுக்கு கடுமையான பதிலடி கொடுக்கும்" இவ்வாறு அவர் பேசினார்.

## காஷ்மீரில் மேலும் ஒருவர் சுட்டுக்கொலை பயங்கரவாதிகளின் வீடுகள் இடிப்பு தொடர்கிறது

**ஸ்ரீநகர், ஏப். 27-**

காஷ்மீரில் அனந்தநாக் மாவட்டம் பஹல்காம் அருகே உள்ள பைசாரன் பள்ளத்தாக்கில் சுற்றுலாப் பயணிகள் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானில் செயல்படும் லஷ்கர்–இ–தொய்பா பயங்கரவாத அமைப்பின் நிழல் அமைப்பான 'தி ரெசிஸ்டன்ஸ் பிரண்ட்' பொறுப்பு ஏற்றது. நாட்டையே உலுக்கிய இந்த தாக்குதலைத் தொடர்ந்து ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. பயங்கரவாதிகள், அவர்களின் கூட்டாளிகள் , ஆதரவாளர்களுக்கு எதிரான தேடுதல் வேட்டையை பாதுகாப்புப் படையினர் தீவிரப்படுத்தி உள்ளனர்.

பயங்கரவாதிகளுக்கு உதவியதாக 100க்கும் மேற்பட்டோரை பிடித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. பஹல்காம் போன்று மீண்டும் ஒரு தாக்குதல் நிகழாமல் தடுக்கும் நோக்கத்துடன் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாதுகாப்பு படையினரின் அதிரடி நடவடிக்கையாக முதலில் 2 பயங்கரவாதிகளின் வீடுகள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன.

அதை தொடர்ந்து தெற்கு காஷ்மீரில் மேலும் 3 பயங்கரவாதிகளின் வீடுகள் இடிக்கப்பட்டது. குப்வாரா மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில் பயங்கரவாதிகளின் பதுங்குமிடத்தை பாதுகாப்பு படையினர் கண்டறிந்தனர். அங்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் ஏ.கே.47 ரக துப்பாக்கிகள், தோட்டாக்கள் மற்றும் பிற வெடி பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த நிலையில் மேலும் 4 பயங்கரவாதிகளின் வீடுகள் இடிக்கப்பட்டன. பாண்டி போரா, புல்வாமா, சோபியான் ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்பு படையினர் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டு பயங்கரவாதிகளின் வீடுகளை தகர்த்தனர். சோபியான் மாவட்டத்தில் உள்ள வாண்டினா பகுதியில் பயங்கரவாதி அத்னன் ஷபி வீடு உள்ளது. அவன் கடந்த ஆண்டு முதல் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வந்தான். அவனது வீடு இடிக்கப்பட்டது. அதை தொடர்ந்து புல்வாமா மாவட்டத்தில் உள்ள அமீர் நசீர் என்ற பயங்கரவாதியின் வீடு தகர்க்கப்பட்டது.

பாண்டி போரா மாவட்டத்தில் லஷ்கர்இ தொய்பா அமைப்பை சேர்ந்த ஜமீல் அகமது வீடு உள்ளது. 2016ம் ஆண்டு முதல் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வந்த அவனது வீட்டை பாதுகாப்பு படை வீரர்கள் இடித்து தரைமட்டமாக்கினார்கள்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியை சேர்ந்த பயங்கரவாதி பரூக் அகமது வீடு குப்வாரா மாவட்டம் கலாரசில் உள்ளது. அவனது வீட்டை அதிகாரிகள் குண்டு வைத்து தகர்த்தனர். கடந்த 48 மணி நேரத்தில் 9 பயங்கரவாதிகளின் வீடுகள் தகர்க்கப்பட்டுள்ளன. ஸ்ரீநகரில் 60க்கும் மேற்பட்ட இடங்களில் அதிரடி சோதனை நடத்தப்பட்டது. சட்டவிரோத செயல்கள் தடுப்பு சட்டத்தின் கீழ் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பஹல்காம் தாக்குதல் சம்பவத்தில் பயங்கரவாதிகளுக்கு உள்ளூரை சேர்ந்த 15 பேர் உதவி செய்தது தெரியவந்தது. இதில் முக்கியமான 3 நபரை பிடித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். இதற்கிடையே பயங்கரவாதிகளின் அட்டூழியம் காஷ்மீரில் தொடர்கிறது. சமூக ஆர்வலர் அவர்கள் சுட்டுக்கொன்றனர்.

குப்வாரா மாவட்டம் காந்திதாஸ் பகுதியை சேர்ந்தவர் குலாம் ரசூல். 45 வயதான அவர் சமூக ஆர்வலர் ஆவார். நள்ளிரவில் அவரது வீட்டை பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். குண்டு பாய்ந்து பலத்த காயம் அடைந்த அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால் வழியிலேயே அவர் பரிதாபமாக உயிரிழந்தார். சமூக ஆர்வலரை பயங்கரவாதிகள் சுட்டுக்கொன்றதற்கான காரணம் தெரியவில்லை. இதை தொடர்ந்து அந்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

## த.வெ.க.வினர் மீது போலீசார் வழக்குப்பதிவு

**சென்னை, ஏப். 27-**

தமிழக வெற்றிக் கழகத்தின் வாக்குச்சாவடி முகவர்களுக்கான கருத்தரங்கு நடத்தும் பணியில் அக்கட்சியின் தலைவர் விஜய் ஈடுபட்டு வருகிறார். முதல்கட்டமாக கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல், சேலம் ஆகிய 7 மாவட்டங்களை சேர்ந்த முகவர்களுக்கான கருத்தரங்கு நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி கோவை மண்டல அளவிலான வாக்குச்சாவடி முகவர்களுக்கான 2 நாள் கருத்தரங்கு நேற்று கோவை அருகே குரும்பபாளையத்தில் உள்ள தனியார் கல்லூரி அரங்கில் தொடங்கியது. கருத்தரங்கில் கட்சியின் தலைவர் விஜய் பங்கேற்றார்.

முன்னதாக, கருத்தரங்கில் பங்கேற்பதற்காக சென்னை விமான நிலையத்தில் இருந்து தனி விமானம் மூலம் கோவைக்கு வருகை தந்தார். அப்போது விஜயை வரவேற்க ஏராளமான த.வெ.க.வினர் குவிந்ததால் விமான நிலையமே ஸ்தம்பித்தது. இதனால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், கோவை விமான நிலையத்தில் டிராலிகள் உள்ளிட்டவற்றை சேதப்படுத்தியதாக த.வெ.க.வினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாகவும் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## பஹல்காம் தாக்குதல் வழக்கு: தேசிய புலனாய்வு முகமை வசம் ஒப்படைப்பு

**புதுடெல்லி, ஏப். 27-**

காஷ்மீரின் பஹல்காமில் சுற்றுலாப்பயணிகள் மீது கடந்த 22ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் அப்பாவி பொதுமக்கள் 26 பேர் கொல்லப்பட்டனர். உலகையே உலுக்கிய இந்த தாக்குதலில் பாகிஸ்தானின் தொடர்பு இருப்பதாக மத்திய அரசு குற்றம் சாட்டி வருகிறது. அத்துடன் பாகிஸ்தானுக்கு எதிராக பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக சிந்து நதிநீர் ஒப்பந்தம் ரத்து, நாட்டில் இருந்து பாகிஸ்தானியர்கள் வெளியேற்றம், விசா ரத்து என பல்வேறு அதிரடிகள் நடந்து வருகின்றன.

இந்நிலையில், உள்துறை அமைச்சகத்தின் உத்தரவின்பேரில் பஹல்காம் தாக்குதல் விசாரணையை ஜம்மு காஷ்மீர் போலீசாரிடம் இருந்து தேசிய புலனாய்வு முகமை கையில் எடுத்துள்ளது. இதனையடுத்து சம்பவ இடத்தில் முகாமிட்டு தடயவியல் நிபுணர்கள் உதவியுடன் ஆதாரங்கள் திரட்டப்படுகின்றன. மேலும், தாக்குதலை நேரில் பார்த்தவர்களிடம் தகவல்களை கேட்டுப்பெற்று விசாரணை தீவிரப்படுத்த தேசிய புலனாய்வு முகமை திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## திருப்பதி மலைப்பாதையில் கட்டுக்கடங்காத அளவு பக்தர்கள் கூட்டம்



**திருப்பதி, ஏப். 27-**

கோடை விடுமுறை மற்றும் வார இறுதி நாள் என்பதால் நேற்று திருப்பதியில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் நேர ஒதுக்கீட்டு சர்வ தரிசன டிக்கெட் பெறுவதற்காக ஸ்ரீவாரி மெட்டு மற்றும் அலிபிரி நடைபாதைகளில் குவிந்தனர். அதிக அளவு பக்தர்கள் குவிந்ததால் தரிசன டிக்கெட் வாங்க பக்தர்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தனர்.

தற்போது திருப்பதியில் கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் கைக்குழந்தைகளுடன் வந்த பக்தர்கள் மற்றும் முதியவர்கள் வெப்பத்தை தாங்க முடியாமல் கடும் சிரமம் அடைந்தனர். திருப்பதியில் பக்தர்கள் காத்திருக்கும் 31 அறைகளும் பக்தர்கள் நிரம்பி காணப்பட்டது.

காஷ்மீர் விவகாரம் தொடர்பாக தற்போது திருப்பதி மலைக்கு வரும் வாகனங்கள் அலிபிரி சோதனை சாவடியில் ஆக்டோபஸ் படையினர் மற்றும் போலீசார் மோப்ப நாய்கள் மற்றும் வெடிகுண்டு சோதனை கருவிகளை கொண்டு தீவிர சோதனை நடத்தி வருகின்றனர். இதனால் கருடா வட்டம் வரை பக்தர்களின் வாகனங்கள் பல மணி நேரம் வரிசையில் காத்து நின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு திருப்பதி தேவஸ்தான விஜிலென்ஸ் அதிகாரிகள், பாதுகாப்பு படையினர் அலிபிரி நடைபாதையில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது சிறுத்தை ஒன்று அப்பகுதியில் நடமாடுவதை கண்டனர். இதையடுத்து சிறுத்தையை வனப்பகுதிக்குள் விரட்டினர். நடைபாதையில் செல்லும் பக்தர்கள் மிகுந்த விழிப்புடன் கும்பலாக செல்ல தேவஸ்தான அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். சிறுத்தை நடமாட்டம் உள்ளதால் பக்தர்கள் பீதி அடைந்துள்ளனர். திருப்பதியில் நேற்று 82,811 பேர் தரிசனம் செய்தனர். 34,913 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ 3.24 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது. நேரடி இலவச தரிசனத்தில் வந்த பக்தர்கள் 18 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்தனர்.

# மத்திய அரசின் உதவித்தொகைபெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்

## தென்காசி ஆட்சியர் வழங்கினார்



**தென்காசி, ஏப். 27-**

தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் மத்திய அரசின் தேசிய வருவாய் வழி திறனாய்வுத் தேர்வு (NMMS Exam) எழுதி சிறப்பிடம் பிடித்து மத்திய அரசின் உதவித்தொகை பெற இருக்கும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார்கள்.

தென்காசி மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் மத்திய அரசின் தேசிய வருவாய் வழி திறனாய்வுத் தேர்வு (NMMS Exam) 2024-2025 ஆம் கல்வி ஆண்டில் தேர்வு எழுதி சிறப்பிடம் பிடித்து ஆண்டிற்கு ரூ.12,000 வீதம் 4 ஆண்டுகளில் ரூ.48000 (ரூபாய் நாற்பத்தி எட்டாயிரம்) மத்திய அரசின் உதவித்தொகை பெற இருக்கும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் 120 நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த 368 மாணவர்களுக்கு பாராட்டு விழா தென்காசி இ.சி.ஈ அரசு (ஆண்கள்) மேல்நிலைப் பள்ளியில் முதன்மைக் கல்வி அலுவலர் ரெஜினி தலைமையில் மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை) அமலாதங்கத்தாய், தென்காசி நகர்மன்றத் தலைவர் சாதிர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிகரம் தொட்ட 368 சாதனையாளர்களை பாராட்டி சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளையும் வழங்கி வாழ்த்தினார்கள். மேலும் முதல் மூன்று இடங்களை பெற்ற ஆவுடையானூர் புனித அருளப்பர் மேல்நிலைப்பள்ளி, புளியங்குடி, ஏ.வி. எஸ் உயர்நிலைப்பள்ளி நெடுவயல், ஸ்ரீ சிவ சைல நாத நடுநிலைப்பள்ளி மற்றும் புளியங்குடி, பரமானந்தா நடுநிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளுக்கு கேடயமும் வழங்கி வழங்கினார்கள்.

குறிப்பாக மாநில அளவில் ஆறாம் இடம் பெற்றமைக்காக மாவட்ட ஆட்சியர் முதன்மைக்கல்வி அலுவலர் உள்ளிட்ட அனைவரையும் பாராட்டினார்கள். விடுமுறை நாட்களில் பயிற்சியை நடத்திய வாசுதேவநல்லூர் வட்டாரக்கல்வி அலுவலர் மாரியப்பன் பாராட்டப்பட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், வட்டாரக்கல்வி அலுவலர் மாரியப்பன். பணி நிறைவு மாவட்டக்கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) ஜெயபிரகாஷ்ராஜன், எவரெஸ்ட் கல்விக் குழும தாளாளர் டாக்டர்.முகைதீன் அப்துல் காதர், தென்காசி ஆகாஷ் அகாடமி பொதுமேலாளர் செந்தில்குமார், இலஞ்சி ஆர்.பி. பள்ளி ஆசிரியர் சுரேஷ் குமார், குலையநேரி அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஆறுமுக நயினார், மாவட்ட உதவித் திட்ட அலுவலர் காதர் மீரான். முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள், முருகேசன், கண்ணன், முதன்மைக்கல்வி அலுவலக பள்ளித்துணை ஆய்வாளர் சுப்புலெட்சுமி, சுற்றுசூழல் ஒருங்கிணைப்பாளர் ஜெயபாலன், ஏ.வி.எஸ். உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அருள் சாமுவேல் மற்றும் மாணவர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஒட்டன்சத்திரத்தில் வருவாய்த்துறை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் வெளிநடப்பு ஆர்ப்பாட்டம்




**திண்டுக்கல், ஏப். 27-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு வருவாய்த்துறை பணியாற்றி வரும் அலுவலர்கள் முதல் கிராம் உதவியாளர்கள் வரை ஓர் அணியில் திரளும் வருவாய்த்துறை சங்கங்களின் கூட்டமைப்பு (பெரா) சார்பில் ஒட்டன்சத்திரம் வட்டத்தலைநகரில் ஒருங்கிணைப்பாளர்கள் கு.மகாராஜா, வரதராஜன், தினேஷ்பாரத், கனகராஜ், தலைமையில்1மணி நேர வெளிநடப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பின்வரும் கோரிக்கைகளான வருவாய்த்துறையில் பணியாற்றுகின்ற அலுவலர் மற்றும் பணியாளர்களின் உயிர் உடமைகளை காக்கும் வகையில் சிறப்பு பணி பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்ற வேண்டும், அனைத்து நிலையிலும் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக விரைந்து நிரப்பி விட வேண்டும், வருவாய்த் துறையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு அதிகமான பணிச்சுமையையும் போதிய கால அவகாசம் வழங்காமல் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு நிர்பந்திக்கும் செயலை அரசு கைவிட வேண்டும் என்றும், வருவாய்த்துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வதற்கு 5% என நிர்ணயிக்கப்பட்டுள்ளது அதை மீண்டும் 25%உயர்த்தி வழங்கவும் கிராம உதவியாளருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் ரத்து செய்யப்பட்டதை மீண்டும் வழங்கிட வேண்டும், வருவாய்த்துறையில் அனைத்து நிலை பணிகளையும் தற்காலிக மற்றும் தொகுப்பு புதிய பணி நியமனங்களை முழுமையாக கைவிட்டு அனைத்து பணிகளும் நிரந்தரமாக்கபட வேண்டும் உள்ளிட்ட பல அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு வருவாய்த்துறை அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், நில அளவை அலுவலர்கள், கிராம உதவியாளர்கள் உள்ளிட்ட 100ற்கும் மேற்பட்டோர் 1மணி நேரம் வெளிநடப்பு செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# வன உரிமைச் சட்டம் குறித்து பயிலரங்கம்



**சேலம், ஏப். 27-**

வன உரிமைச் சட்டம் குறித்த மாவட்ட அளவிலான பயிலரங்கம் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் வனப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினருக்கான வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்கும், வன உரிமைகளைப் பாதுகாத்திடவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் வன உரிமைகளை வழங்குவதற்காக வகுக்கப்பட்ட அதிகாரங்கள், தொடர்புடைய நிறுவனங்களின் பொறுப்புகள் மற்றும் பணிகள் குறித்து வருவாய்த்துறை, வனத்துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர்களுடனான ஒருநாள் பயிலரங்கம் இன்றையதினம் நடத்தப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் பழங்குடி கிராம சபையைக் கூட்டி, வன உரிமைச் சட்டத்தைச் செயல்படுத்துவது தொடர்பாக வன உரிமைகள் குழு அமைப்பது தொடர்பாகவும், வன நிலத்தில் வசிக்கும் பழங்குடியினர் மக்கள் மூன்று தலைமுறைகளாக அல்லது 75 ஆண்டுகளாக வன நிலத்தில் வசித்து வரும் பிற இனத்தைச் சார்ந்தவர்களுக்கு தனிநபர் வன உரிமைப்பட்டா வழங்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இப்பயிலரங்கில் உரிய ஆலோசனை வழங்கப்பட்டது.

வன உரிமைச் சட்டம் 2006 ன்படி, சேலம் மாவட்டத்தில் 956 தனிநபர் வன உரிமைப் பட்டாக்களும், 70 கிராம வனக் குழுக்களுக்கு சமுதாய வன உரிமைப் பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

வன உரிமைச் சட்டமானது 13.12.2005க்கு முன்பாக காடுகளை அனுபவத்தில் கொண்டு விவசாயம் செய்து வரும் நிலங்களுக்கும் இச்சட்டம் பொருந்தும். அதேபோன்று, ஒவ்வொரு கிராமத்தில் உள்ள 18 வயதுக்கு மேற்பட்ட எல்லோரையும் உறுப்பினர்களாகக் கொண்டு கிராம சபைகளை உருவாக்கிடவும் உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன.

மேலும், பழங்குடியினர் மக்கள் அல்லது பிற இனத்தைச் சேர்ந்தவர்களோ வனப் பகுதிகளில் வசித்து வந்ததற்கான உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில், கிராம சபையில் ஒப்புதல் பெற்று விண்ணப்பங்கள் தொடர்புடைய அலுவலகங்களுக்கு வரப்பெறும் பட்சத்தில் உரிய விசாரணை மேற்கொண்டும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் தங்களது நிலையில் ஆய்வு செய்தும், தகுதியான விண்ணப்பங்களை மேல்நடவடிக்கைகாக அறிவுறுத்தப் பட்டுள்ளது. கோட்ட அளவிலான குழுவிற்கு அனுப்பிடவும்

கிராம எல்லைகளுக்கு உள்ளேயும், வெளியேயும் பாரம்பரியமாக சேகரிக்கப்படும் பொருட்களை உபயோகிப்பதற்கும். பிறருக்கு கொடுப்பதற்குமான உரிமையினை சமுதாய வன உரிமைப்பட்டா மூலம் பெறலாம். இவ்வாறு தெரிவித்தார். இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) நே.பொன்மணி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், வருவாய் கோட்டாட்சியர்கள் அ.அபிநயா, தா. பிரியதர்ஷினி, உதவி வன பாதுகாவலர் ஆர். செல்வகுமார், பழங்குடியினர் நல திட்ட அலுவலர் சுகந்தி பரிமளம், வன உரிமைச்சட்ட ஒருங்கிணைப்பாளர் பகவநிதி, வன உரிமைச்சட்ட அறிவுசார் ஆலோசகர் கிரிராவ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் மாவட்ட வன உரிமைக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# நீர்நிலைகளில் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகளை மே மாதம் இறுதிக்குள் முடிக்க வேண்டும்

## மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அறிவுறுத்தல்




**கன்னியாகுமரி, ஏப். 27-**

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட நீர்வளத்ஆதாரத்துறை, பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக் கலைத்துறை, பேரூராட்சிகள் உள்ளிட்ட துறை அலுவலர்களுடான கலந்தாய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமையில் ஆட்சியர் அலுவலக குறள் (சிறு) கூட்டரங்கில் நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து மாவட்ட காண்காணிப்பு அலுவலர் ஹனீஷ் சாப்ரா, மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா ஆகியோர் நீர்வளத்துறையின் சார்பில் கணபதிபுரம் பேரூராட்சி, மணவாளக்குறிச்சி தேர்வுநிலை பேரூராட்சி, பொன்மனை பேரூராட்சி, காட்டுப்புதூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீர்வளத்துறை சார்பில் நடைபெற்று வரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் கன்னியாகுமரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து வளர்ச்சி திட்டப்பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டம் கணபதிபுரம் பேரூராட்சிக்குட்பட்ட கல்லுக்கட்டி ஆலங்கால் ஓடை 6.8 கி.மீட்டர் நீளத்திற்கு ரூ.5 லட்சம் மதிப்பில் தூர்வாரும் பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மணவாளக்குறிச்சி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட சேரமங்கலம் பெரியகுளம் மறுகால் ஓடை 4.8 கி.மீட்டர் நீளத்திற்கு ரூ.5 லட்சம் மதிப்பில் தூர்வாரும் பணிகள் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. மேலும் நீர்நிலைகளின் கரையின் உறுதித்தன்மையினை உறுதிசெய்திட துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டது.

அதனைத்தொடர்ந்து பொன்மனை பேரூராட்சிக்குட்பட்ட அரியம்பகோடு பொன்மனை பி கிராமத்திற்குட்பட்ட தும்பக்கோடு பகுதியில் நிரந்தர வெள்ள தடுப்புத்திட்டத்தின் கீழ் ரூ.45 லட்சம் மதிப்பில் 3 மதகுகள் சரிசெய்யப்பட்டு, கோதையாறு இடதுகரை கால்வாய் பட்டணம்கால்வாய்க்கு தண்ணீர் திறந்துவிடப்படும். மேலும் காட்டுப்புதூர் ஊராட்சிக்குட்பட்ட துவச்சி பகுதியில் ரூ.1.40 கோடி மதிப்பில் தோவாளை சானல் முடிவுற்ற பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதோடு, மீண்டும் பேரிடர் காலங்களில் பாதிப்புகள் ஏதும் ஏற்படாத வகையில் பக்கவாட்டு சுவர்கள் பாதுகாப்புடனும், உறுதித்தன்மையுடனும் இருப்பதை துறைசார்ந்த அலுவலர்கள் உறுதி செய்வதோடு, கண்காணித்திட வேண்டும் என துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் நீர்வளத்துறை சார்பில் நிரந்தர வெள்ளத்தடுப்பு திட்டத்தின் கீழ் நாகர்கோவில், தக்கலை, குழித்துறை மற்றும் செருப்பலூர் வடிநில உட்கோட்டத்தின் கீழ் 316 பணிகள் ரூ.68 கோடி மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தற்போது ரூ.37 கோடி மதிப்பில் 242 பணிகள் முடிவுற்றுள்ளது. மீதமுள்ள 174 பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை தரமானதாகவும், உறுதித்தன்மையுடனும் இருப்பதை துறை சார்ந்த அலுவலர்கள் உறுதி செய்வதோடு, இப்பணிகளை மே மாதம் இறுதிக்குள் முடிக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து சுசீந்திரம் பேரூராட்சிக்குட்பட்ட தேரூர் குளத்தில் விவசாயிகளுக்கு வண்டல் மண் எடுப்பது குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். உரிய அளவில் வண்டல் மண் எடுப்பதை உறுதிசெய்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். மேலும் அகஸ்தீஸ்வரம் வட்டம் நாகர்கோவில்மாநகராட்சிக்குட்பட்ட வடிவீஸ்வரத்தில் பகுதியில் அரசு நிலத்தினை ஆக்கிரமித்து குடியிருப்பு அமைந்துள்ள நிலமில்லாதவர்களுக்கு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி இலவச பட்டா வழங்குவது குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதோடு. குடியிருப்பு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை நேரில் சந்தித்து கலந்துரையாடப்பட்டது. அவர்களில் தகுதியானவர்களுக்கு வருவாய்த்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செண்பகராமன்புதூர் பகுதியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் வீடுகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கட்டப்பட்டு வரும் வீட்டின் அடிப்படை வசதிகள், கட்டுமான பணிகளின்தரம் உள்ளிட்டவைகள் ஆய்வுமேற்கொண்டதோடு. கட்டுமான பணிகள் தொய்வின்றி நடைபெற பயனாளிக்கு அறிவுறுத்தப் பட்டது. மேலும் பணிகளை தரமானதாகவும், உறுதித்தன்மையுடன் அமைத்திடுவதை துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு தெரிவித்தார்கள்.

ஆய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியம், பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் காளீஸ்வரி, நீர்வள ஆதாராத்துறை செயற்பொறியாளர் அருள்சன்பிரைட், வேளாண்மை இணை இயக்குநர் ஜெங்கின் பிரபாகர், கோதையாறு வடிநிலக் கோட்ட உதவி செயற்பொறியாளர்கள் வின்ஸ்டன் லாரன்ஸ் (தக்கலை), செல்வ உமா (இரணியல் பாசனப்பிரிவு), கதிரவன் (தக்கலை பாசன சிறப்பு பிரிவு), மூர்த்தி (கோதையாறு), தோட்டக் கலைத்துறை உதவி இயக்குநர் சரண்யா, வட்டாட்சியர்கள் முருகன் (அகஸ்தீஸ்வரம்), ராஜாசேகர் (தோவாளை), ஜாண் கெனி (கல்குளம்), கந்தசாமி (திருவட்டார்), ஜூலியன் ஹூவர் (விளவங்கோடு). துறை அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# உயர்நீதிமன்ற நீதிபதி முதலமைச்சருடன் சந்திப்பு



**புதுச்சேரி, ஏப். 27-**

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சுப்ரமணியன், நேற்று சட்டசபையில் முதலமைச்சர் ரங்கசாமியை சந்தித்து பேசினார்.

அரசு முறை பயணமாக நேற்று புதுச்சேரிக்கு வருகை தந்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சுப்ரமணியன், சட்டசபையில் முதலமைச்சர் ரங்கசாமியை மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார்.

அப்போது, புதுச்சேரி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அருகில் சுதேசி பஞ்சாலைக்கு சொந்தமான இடத்தில் 2 ஏக்கர் பரப்பளவில் புதிய குற்றவியல் நீதிமன்றங்கள் கட்ட முடிவு செய்யப்பட்டது. இச்சந்திப்பின்போது சபாநாயகர் செல்வம், அமைச்சர் லட்சுமி நாராயணன், மாவட்ட முதன்மை நீதிபதி ஆனந்த், சட்டத்துறை செயலர் சத்தியமூர்த்தி, வனவிலங்கு தலைமைக் காப்பாளர் அருள்ராஜன், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் வீரசெல்வம் ஆகியோர் உடன் இருந்தனர்.

# போப் உடல் அடக்கம் ஜென்மராக்கினி ஆலயத்தில் அஞ்சலி



புதுச்சேரி, ஏப். 27-

போப் பிரான்சிஸ் உடல் அடக்கம் செய்ததையொட்டி ஜென்மராக்கினி ஆலயத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவர் போப் பிரான்சிஸ், 88, கடந்த 21ம் தேதி உடல்நலக் குறைவால் உயிரிழந்தார். அவரது உடல் நேற்று அடக்கம் செய்யப்பட்டது. அதையொட்டி, புதுச்சேரி ஜென்மராக்கினி ஆலயத்தில் கடலூர்-புதுச்சேரி மறை மாவட்ட பேராயர் பிரான்சிஸ் கலிஸ்ட் முன்னிலையில், போப் பிரான்சிஸ் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். நிகழ்ச்சியில் முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி, முன்னாள் அமைச்சர் எஸ்.பி.சிவக்குமார், காங்கிரஸ் வழக்கறிஞர் அணி தலைவர் மருதுபாண்டியன், முன்னாள் கவுன்சிலர் குமரன் உட்பட ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.

# மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாமை திருப்பூர் ஆட்சியர் ஆய்வு



திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக்கூட்டரங்கில் இந்திய தேர்தல் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், முகவரி மாற்றம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என குறியீடு செய்தல் உள்ளிட்ட சேவைகள் தொடர்பான மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்

# கோடைக்கால பயிற்சி முகாமை திண்டுக்கல் ஆட்சியர் ஆய்வு



திண்டுக்கல், ஏப். 27-

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திண்டுக்கல் மாவட்டத்தின் சார்பாக நடைபெற்று வரும் மாவட்ட அளவிலான கோடைகால பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திண்டுக்கல் மாவட்டத்தின் சார்பாக நடைபெற்று வரும் மாவட்ட அளவிலான கோடைக்கால இலவச பயிற்சி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர், கிராமப்புற மாணவர்களிடையே விளையாட்டுத்திறனை மேம்படுத்திடும் வகையிலும் விளையாட்டுத்திறனை ஊக்குவித்திடும் வகையிலும் விளையாட்டுத் துறைகளில் பல்வேறு சிறப்புத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்து வருகிறார்கள். மேலும், மாண்புமிகு துணை முதலமைச்சரின் சீரிய முயற்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை தமிழ்நாட்டில் பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதன், மூலம், தமிழ்நாட்டில் இளைஞர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் பெருமளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று சாதனை புரிந்து வருகிறார்கள்.

விளையாட்டு துறை சார்பாக பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள், பேரறிஞர் அண்ணா விரைவு சைக்கிள் போட்டிகள் பேரறிஞர் அண்ணா மராத்தான் போட்டிகள் அரசு ஊழியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்நீச்சல் கற்பித்தல் பயிற்சி முகாம் மற்றும் கோடைகால பயிற்சி முகாம் என பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைபெற்று வருகிறது.

பயிற்சி மற்றும் செயல் திறனை மேம்படுத்துவதில் இருப்பிட பயிற்சியின் பங்கு ஈடுஇணையில்லாதது. தமிழ்நாடு அரசு. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் மாநிலத்தில் விளையாட்டு விடுதிகளை நிறுவி மாணவர்களின் விளையாட்டு நுணுக்கம் மற்றும் திறனை மேம்படுத்த சிறப்பு பயிற்சிகளை வழங்குகிறது விளையாட்டு விடுதிகளை மாணவர்கள் குறிப்பாக கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ளவர்கள் பெருமளவில் பயன்படுத்துகின்றனர். விளையாட்டு விடுதிகளில் அறிவியல் பூர்வமான விளையாட்டுப் பயிற்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய வசதிகள் உண்டு உறைவிட வசதிகள் வழங்கப்படுகின்றன மாணவர்கள் தங்களது கல்வியினை அருகில் உள்ள பள்ளிகளில் தொடரலாம் தமிழ்நாட்டில் 23 மாவட்டங்களில் 27 விளையாட்டு விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. ஒரு மாணவிக்கு ஒரு நாளுக்கு ரூ.250 வீதம் உணவு மானியம் வழங்கப்படுகிறது. மாணவிகளுக்கு சத்தான உணவுகள் வழங்கப்படுகிறது நாள்தோறும் அசைவ உணவு. பருவ கால பழ வகைகள் இனிப்புகள், உலர்ந்த பழங்கள், பால், முட்டை சிற்றுண்டிகள், சத்துமாவு கஞ்சி போன்ற சத்தான உணவுகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திண்டுக்கல் மாவட்டத்தின் சார்பாக 2025-26ஆம் ஆண்டிற்கு மாவட்ட அளவில் கோடைக்கால இலவச பயிற்சி முகாம் 25.04.2025 முதல் 15052025 வரை 21 நாட்கள் காலை 6 மணி முதல் 8.30 மணி வரையிலும், மாலையில் 4 மணி முதல் 6.30 வரையிலும் மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட விளையாட்டரங்கத்தில் நடைபெற்று வருகிறது.

அதன்படி, தடகளம், கூடைப்பந்து, கையுந்துப்பந்து, ஹாக்கி ஆகிய விளையாட்டு பயிற்சி முகாம் மாவட்ட விளையாட்டரங்கத்திலும், கால்பந்து விளையாட்டு பயிற்சி முகாம் மாவட்ட விளையாட்டரங்கம் மற்றும் மலைக்கோட்டை விளையாட்டு மைதானத்திலும் (இருபாலருக்கும்) நடைபெற்று வருகிறது. மேற்காணும் இந்த பயிற்சி முகாமில் 18 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொள்ளலாம்.

மாவட்ட விளையாட்டரங்கத்தில் நடைபெற்று வரும் பயிற்சி முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் ஆய்வு மேற்கொண்டார்கள். ஆய்வின்போது பயிற்சி பெற்று வந்த மாணவ, மாணவிகளிடம் பயிற்சியை பற்றி கேட்டறிந்து கலந்துரையாடினார். மேலும் விளையாட்டரங்கத்தில் உள்ள இயற்கை புல் தரை கால்பந்து மைதானம், தடகள ஓடுதளம், அலுவலகம் மற்றும் உடற்பயிற்சி கூடம் ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மண்டல முதுநிலை மேலாளர் (மதுரை மண்டலம்) வேல்முருகன், மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவா மற்றும் பயிற்றுநர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்கள்.

# சேலம் விநாயகா மிஷனின் விம்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரி சார்பில் கனா ஒலிம்பிக்ஸ்




சேலம், ஏப். 27-

சேலம் விநாயகா மிஷனின் விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரி சார்பில் கனா ஒலிம்பிக்ஸ் நடந்தது.

பார்வை குறைபாடு விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு சேலம் விநாயகா மிஷனின் விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் கண் ஒளியியல் பிரிவின் மூலம் பொதுமக்களுக்கு இதனை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் பார்வை குறைபாடு உள்ளவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும். கனா ஒலிம்பிக்ஸ் என்ற விளையாட்டு மற்றும் கலைநிகழ்வுகளை பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் கணேசன் வழிகாட்டுதலின்படி கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு கல்லூரியின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மகிழன் பங்கேற்றார். முன்னதாக கல்லூரியின் டீன் மற்றும் சிறப்பு விருந்தினரும் பார்வை குறைபாடு உள்ள மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியினை ஒலிம்பிக் சுடர் ஏற்றி தொடக்கி வைத்தனர். இதில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த மாணவர்கள் சுமார் 100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். அவர்களுக்கான பல்வேறு வெளி மற்றும் உள்ளரங்க விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. தொடர்ந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகளான நடனம் பாடல் போன்ற போட்டிகளும் நடத்தப்பட்டன. இது மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்று தங்களின் தனித்திறனை வெளிப்படுத்தினர். நிகழ்வின் முடிவில் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது.

இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் கல்லூரியின் கண் ஒளியியல் பிரிவின் பொறுப்பாளர் பேராசிரியை தமிழ் சுடர் மற்றும் உதவி பேராசிரியர்கள் சூர்யா, ஜெகதீஸ்வரி, லாவன்யா அக்ஷயா ஆகியோர் செய்திருந்தனர்.

# இதயா மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் பல்திறன் போட்டி



புதுச்சேரி, ஏப். 27-

புதுச்சேரி இதயா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வணிகவியல் துறை போட்டிகள் நடந்தது. இதில் பல கல்லூரிகளில் இருந்து 150க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். புதுவை சட்டமன்ற உறுப்பினர் வைத்தியநாதன் சிறப்பு விருந்தனராக கலந்துகொண்டார். மாநில செயற்குழு உறுப்பினர் விஜயலக்ஷ்மி ஜெயமூர்த்தி புதுச்சேரி காங்கிரஸ் கமிட்டி, பாலகுமார், நடிகர், இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர் டீனா சர்வியா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாணவிகளின் வணிகவியல் குறித்து நடைபெற்ற பல்திறன் போட்டிகள், படைப்பாற்றல் திறன், பதுமைத்திறன்கள் அனைத்தும் வெளிப்படுத்தும் வகையில் போட்டிகள் நடைபெற்றன. இறுதியில் ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி மாணவ, மாணவிகள் கோப்பையை வென்றனர்.

# காரைக்காலில் போலி நகையை அடகு வைத்து ஏமாற்றிய 3 பேர் கைது

**காரைக்கால், ஏப். 27-**

காரைக்காலில் போலி நகையை அடகு வைத்து ஏமாற்றிய 3 பேரை நகர போலீசார் கைது செய்தனர்.

காரைக்கால் நகர் பகுதியில் சேர்ந்தவர் லட்சுமி நாராயணன். இவர் காரைக்கால் திருநள்ளார் சாலையில் நகைக்கடை நடத்தி வருகிறார். இவர் நேற்று முன்தின மாலை கடையில் இருந்த பொழுது, திடீரென வந்த மூன 3 மர்ம நபர்கள் இவரிடம் ஒரு பொருளை கொடுத்து, இது தங்க செயின். இதை அடமானமாக வைத்து ரூபாய் ஒன்றரை லட்சம் வழங்குமாறு கேட்டுள்ளனர். தொடர்ந்து நகையை எடை போட்டு பார்த்த பொழுது அவர்கள் குறிப்பிட்ட அளவிற்கு நகை இருந்தது. இருந்தாலும் அதனை முறைப்படி சோதனை செய்ய, எதிரே உள்ள உறவினர் கடை ஒன்றில் நகையை பரிசோதனை செய்த பொழுது, அதில் சில குறைபாடுகள் இருந்தது தெரிய வந்தது. ஆனால் நகையில் 916 மற்றும் சில முத்திரைகள் உண்மையாக இருந்ததுபோல் இருந்தது. தொடர்ந்து அவர்களிடம் நைசாக பேசி அமர வைத்து, மூன்று பேரையும் காரைக்கால் நகர போலீசாரிடம் ஒப்படைத்தனர். விசாரணையில் கும்பகோணம் கல்லூர் பகுதியில் சேர்ந்த பரசுராமன் (28), காரைக்கால் நேரு நகர் ஹவுசிங் போர்டு சேர்ந்த சதீஷ்குமார் (26), காரைக்கால் சொக்கநாதர் கோவில் தெருவை சேர்ந்த முருகவே (27) ஆகிய 3 நபர்கள் என்பது தெரிய வந்தது. தொடர்ந்து 3 பேரையும் காரைக்கால் நகர போலீசார் கைது செய்து போலி நகையை பறிமுதல் செய்தனர். இச்சம்பவம் காரைக்காலில் பரப்பரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருப்புதல் தேர்வினை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆய்வு



**புதுக்கோட்டை, ஏப். 27-**

இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் குறுகிய கால நீட் பயிற்சிக்கான நான்காம் திருப்புதல் தேர்வினை முதன்மைக் கல்வி அலுவலர் சண்முகம் பார்வையிட்டார். மாணவர்கள் ஆர்வமுடன் தேர்வினை எழுதினர். மாவட்ட நீட் ஒருங்கிணைப்பாளர் முனைவர் மெ.சி சாலை செந்தில் ஏற்பாட்டில் பயிற்சி மைய ஒருங்கிணைப்பாளர்கள் இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை தமிழரசி, அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் காவேரி நகர் செந்தில் முன்னிலையில் திருக்கோகர்ணம் அரசு மேல்நிலைப்பள்ளி முதுகலை வேதியியல் சுரேஷ், இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி முதுகலை இயற்பியல் ஆசிரியை கற்பகம் ஆகியோர் தேர்வினை நடத்தினர்.

நீட் தேர்வினை எவ்வித அச்சமும் இன்றி எழுத மாவட்டத்தில் இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி புதுக்கோட்டை அறந்தாங்கி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆர்சி உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி இலுப்பூர் ஆகிய மூன்று மையங்களில் மாவட்ட பள்ளிக்கல்வித்துறையின் மூலம் நடைபெற்று வருகிறது. மருத்துவ படிப்பிற்கான நீட் நுழைவுத் தேர்வு வருகிற மே மாதம் நான்காம் தேதி நடைபெற உள்ளது. பயிற்சி மையங்களில் தாவரவியல் விலங்கியல் இயற்பியல் வேதியல் ஆகிய பாடங்களில் பாடங்களுக்கு எட்டு ஆசிரியர் வீதம் 3 மையங்களுக்கும் 24 முதுகலை பாட ஆசிரியர்களை நியமித்து பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த நீட் தேர்விற்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

நீட் நுழைவுத் தேர்விற்கு முன்னதாக மாதிரித் தேர்வு 180 கேள்விகள் 720 மதிப்பெண்களுக்கு நடைபெற உள்ளது.

# விழுப்புரத்தில் தவெக சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு



**விழுப்புரம், ஏப். 27-**

விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் தென்மேற்கு மாவட்டம் சார்பில் நடைபெற்ற நீர் மோர் பந்தலை தமிழக வெற்றி கழகத்தின் தென்மேற்கு மாவட்ட செயலாளர் வடிவேல் திறந்து வைத்தார். கோடை வெயிலில் தாக்கத்தை போக்கும் வகையில் பல்வேறு பகுதிகளில் நீர், மோர் பந்தல் திறக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி நகரம் சார்பில் நீர், மோர் பந்தல் அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு தர்பூசணி பழம், கிருனி பழம், வெள்ளரிப்பிஞ்சு, இளநீர், குளிர்பானம் பாட்டில்கள் ஆகியவற்றை தென்மேற்கு மாவட்ட செயலாளர் வடிவேல் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட இணை செயலாளர் ரமேஷ் எ சக்திவேல் பொருளாளர் விஜய் தீப் இளைஞர் அணி அமைப்பாளர் பிரித்திவிராஜ், விக்கிரவாண்டி நகர செயலாளர் தளபதி சிவகுமார், நகர இணைச் செயலாளர் விஜய் ரகு, துணைச் செயலாளர் தீனா ஹேமாலதா மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

தினமும்
மாலையில்
மாலை எக்ஸ்பிரஸ்
படியுங்கள்

# அதியமான் பப்ளிக் பள்ளி ஆண்டு விழா



**கிருஷ்ணகிரி, ஏப். 27-**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பகுதியில் செயல்பட்டு வரும் அதியமான் பப்ளிக் பள்ளி தாளாளர் சீனி திருமால் முருகன் தலைமையில் ஆண்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தனியார் பள்ளிகள் கூட்டமைப்பு தலைவர் நந்தகுமார் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்.

பள்ளி மாணவ, மாணவிகள் நாளைக்கு தங்களது தனி திறன்களை நடனம் மற்றும் செயல் விளக்கத்துடன் வெளிப்படுத்தினார்கள். இந்த நிகழ்வில் அதியமான் கல்வி நிறுவனங்களின் செயல் அலுவலர் ஷோபா திருமால் முருகன், நிர்வாக இயக்குனர் கணபதி ராமன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் கலைமணி சரவணகுமார், குழந்தைகளின் பெற்றோர்கள், அலுவலகப் பணியாளர்கள், ஆசிரியர்கள், பேருந்து ஓட்டுநர்கள் பங்கேற்றனர்.

# ஈரோடு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து அரசு செயலாளர் நேரில் ஆய்வு

**ஈரோடு, ஏப். 27-**

ஈரோடு மாவட்டம், சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் மண்டல அளவிலான வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நடைபெறவுள்ளதைத் தொடர்ந்து, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் தட்சிணாமூர்த்தி மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து, நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு மாவட்டம், சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில், மண்டல அளவிலான வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு அடுத்த மாதம் (மே மாதம்) இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளதைத் தொடர்ந்து, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் தட்சிணாமூர்த்தி மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து, தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை இயக்குநர் குமாரவேல் பாண்டியன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் மண்டல அளவிலான வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம், வீரப்பன்சத்திரம், சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அடுத்த மாதம் (மே மாதம்) இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளது. விவசாயிகள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள், உணவு பதப்படுத்துபவர்கள், ஏற்றுமதியாளர்களுக்கு இடையே நவீன தொழில்நுட்பங்கள், புதிய ரகங்கள், வேளாண் இயந்திரங்கள், மதிப்பு கூட்டும் தொழில் நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஈரோடு மாவட்டத்தில் இக்கண்காட்சி நடத்தப்படவுள்ளது. மேலும், இக்கண்காட்சியில் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், சேலம். நாமக்கல், நீலகிரி, தருமபுரி, கிருஷ்ணகிரி, கரூர் மற்றும் திருச்சி ஆகிய 10 மாவட்டங்கள் பங்கேற்க உள்ளன. இக்கண்காட்சியில் அரசு துறைகளின் சார்பில் 70 அரங்குகளும் தனியார் நிறுவனங்கள் சார்பில் (உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உட்பட) 130 அரங்குகளும் அமைக்கப்பட உள்ளன. நாள் ஒன்றுக்கு 5000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் அடுத்த மாதம் இரண்டு நாட்கள் இக்கண்காட்சி நடத்தப்பட உள்ளது. இக்கண்காட்சியில் விவசாயிகளுக்கு தேவைப்படும் நவீனரக மற்றும் பாரம்பரிய விதைகள், பழச்செடிகள், குழித்தட்டு நாற்றுகள், பதப்படுத்தப்பட்ட பொருட்கள், உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் அங்கக இடுபொருட்கள், நவீன வேளாண் இயந்திரங்கள் நுண்ணீர் பாசன உபகரணங்கள், இடுபொருட்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்படுவதோடு, விற்பனையும் செய்யப்படவுள்ளது. மேலும் இவாடகை, உழவன் செயலி, வேளாண் அடுக்ககத்தில் விவசாயிகளுக்கான பதிவு போன்ற சேவைகளும் வழங்கப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து, சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ள மண்டல அளவிலான வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, வேளாண்மைத்துறையின் சார்பில் நாட்டு ரக விதைகள், பயிர் வகைகள், அதிக விளைச்சல் தரும் நெல் ரகங்கள், சிறுதானியங்கள் மற்றும் சிறுதானிய மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள், வேளாண் பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திரங்கள், தளவாட பொருட்கள், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் நாட்டின மாடுகள், காங்கேயம் காளைகள், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையின் சார்பில் வேளாண் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், மீன்வளத்துறையின் சார்பில் மீன் இரகங்கள், வேளாண் உற்பத்தியாளர்கள் குழு சார்பில் இயற்கை வேளாண் பொருட்கள் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களை அதிகளவில் காட்சிபடுத்துவதோடு, அதன் பயன் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் (பொ) தனலட்சுமி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் தமிழ்ச்செல்வி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) லோகநாதன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் குரு சரஸ்வதி, செயலாளர், துணை இயக்குநர் (ஈரோடு விற்பனைக்குழு) சாவித்திரி, வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் மனோகர் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



# இதயா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு



**புதுச்சேரி, ஏப். 27-**

புதுச்சேரி இதயா மகளிர் கல்லூரியில் கணினி பயன்பாட்டு துறையும் போதைப் பொருள் தடுப்பு குழுவும் இணைந்தும் நடத்தும் போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரியின் முதல்வரும் செயலாளருமான சகோதரி பாத்திமா தலைமை உரையாற்றினார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ரமேஷ் காவல் (Anti Narotics Task Force, Gorimedu) 5 சிறப்புரையாற்றினார். அவரது உரையில் போதைப் பொருளினால் பாதிக்கப்படும் இன்றைய இளைய தலைமுறையினர் தங்களை எவ்வாறு இன்றைய இளைய தலைமுறையினர் தங்களை எவ்வாறு போதையிலிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பது குறித்து உரையாற்றினார்கள்.

டாக்டர் வி.சந்திரகலா, கலைவாணி ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட்டனர். துறைத் தலைவர் மற்றும் உதவிப் பேராசிரியர் ஆகியோர்

மாணவிகளுக்குப் பயனுள்ளதாக அமைந்தது கலந்துரையாடலில் மாணவிகள் பலர் வினாக்கள் கேட்டு பதில் அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் 150 கல்லூரி மாணவர்கள் கலந்துக்கொண்டு பங்கேற்றனர்.

# போப் பிரான்சிஸ் படத்துக்கு திமுக சார்பில் அஞ்சலி




**புதுச்சேரி, ஏப். 27-**

கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் பிரான்சிஸ் உடலுக்கு இறுதிச்சடங்கு நேற்று வாடிகன் நகரில் நடைபெற்றது.

இதனையொட்டி, புதுவை மிஷன் வீதியில் உள்ள பேராயர் இல்லத்தில் பங்குத்தந்தை ரொசாரியோ முன்னிலையில் நேற்று நடந்த அஞ்சலி நிகழ்ச்சியில், மாநில திமுக அமைப்பாளரும் எதிர்க்கட்சி தலைவருமான சிவா, அவைத்தலைவர் எஸ்.பி.சிவக்குமார், அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., உருளையன்பேட்டை தொகுதி பொறுப்பாளர் கோபால் மற்றும் திமுக நிர்வாகிகள் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

# ஏனாமில் ஏற்பட்ட குப்பை பிரச்னைக்கு கலெக்டர் நேரில் தீர்வு



**புதுச்சேரி, ஏப். 27-**

புதுவை மாவட்ட கலெக்டர் குலோத்துங்கன் 2 நாள் அரசு முறை பயணமாக ஏனாம் பிராந்தியம் சென்ற நிலையில் அங்கு பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டார்.

இதனை தொடர்ந்து அப்பிராந்தியத்தில் பல நாட்களாக குப்பைகள் அல்லாமல் சுகாதார சீர்கேடு ஏற்பட்ட நிலையில் கலெக்டர் குலோத்துங்கன், சம்பந்தப்பட்ட கான்ட்ராக்டர்களை அழைத்து பேசினார்.

அப்போது கலெக்டர் குலோத்துங்கன் கூறுகையில், மின்துறைக்கு சொந்தமான இடத்தில் குப்பைகளை கொட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கு பொதுமக்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்து வந்த நிலையில் இப்பணியை தடுத்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தகுந்த பாதுகாப்புடன் குப்பைகள் அள்ளும் பணி நடைபெறுகிறது. 90 சதவீத குப்பைகள் அள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள குப்பைகள் விரைவில் அள்ளப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஏனாம் பிராந்திய அதிகாரி முனுசாமி மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# வில்லியனூர் லூர்து அன்னை ஆலய ஆண்டு பெருவிழா துவங்கியது



**புதுச்சேரி, ஏப். 27-**

புதுச்சேரி வில்லியனூர் தூய லூர்து அன்னை ஆலயத்தில் 148வது ஆண்டு பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் துவங்கியது.

வில்லியனூர் தூய லூர்து அன்னை ஆலய ஆண்டு திருவிழா ஆண்டுதோறும் ஈஸ்டர் பண்டிகை முடிந்த 6ம் நாளில் கொடியேற்றத்துடன் துவங்குவது வழக்கம். அதன்படி இவ்வாண்டு 148வது திருவிழா நேற்று காலை 5:30 மணிக்கு நடந்த கூட்டு திருப்பலிக்கு பிறகு கொடி ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு கொடிமரத்தில் சென்னை மயிலை உயர் மறைமாவட்ட முன்னாள் பேராயர் சின்னப்பா நேற்று துவக்கி வைத்தார்.

திருவிழா நாட்களில் தினமும் காலை மற்றும் மாலையில் சிறப்பு திருப்பலி, இரவு 7 மணிக்கு மேல் அலங்கரிக்கப்பட்ட தேர் பவனி நடக்கிறது. வரும் 4ம் தேதி ஆண்டு பெருவிழா நடக்கிறது. விழாவை முன்னிட்டு காலை 7:30 மணிக்கு கும்பகோணம் மறை மாவட்ட முன்னாள் ஆயர் அந்தோணிசாமி தலைமையில் சிறப்பு கூட்டு திருப்பலி நடக்கிறது.

அன்று மாலை 6 மணி அளவில் புதுவை கடலூர் உயர் மறைமாவட்ட பேராயர் பிரான்சிஸ் கலிஸ்ட் தலைமையில் சிறப்பு திருப்பலி, இரவு 7:30 மணிக்கு மேல் வைரகிரீடம் சூட்டப்பட்டு மாதா ஆடம்பர தேர் பவனி நடக்கிறது. 5ம் தேதி காலை 6:30 மணி திருப்பலிக்கு பின், கொடியிறக்க நிகழ்ச்சி நடக்கிறது.

விழா ஏற்பாடுகளை திருத்தல அருட்தந்தையர்கள் ஆல்பர்ட், ஆல்வின் அன்பரசு, டொமினிக் சாவியோ, அலெக்சிஸ், பங்கு பேரவை துணைத் தலைவர் டொமினிக், பொருளாளர் தர்மதுரை, செயலாளர் ஜெயராஜ், பெஞ்சமின் உள்ளிட்ட பலர் செய்து வருகின்றனர்.

# மக்கள் விரும்பும் கழக ஆட்சி புதுச்சேரி மாநிலத்தில் அமையும்

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா உறுதி



**புதுச்சேரி, ஏப். 27-**

கழக தலைவரும்,தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் 72 வது பிறந்தநாளையொட்டி புதுச்சேரி மாநிலம் முழுவதும் கழகத்தினர் ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், இரத்ததான முகாம் உள்ளிட்ட மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக புதுச்சேரி மாநில கழகம் மற்றும் கழக மருத்துவ அணி சார்பில், மாநில மருத்துவர் அணி அமைப்பாளர் ஆனந்த் ஆரோக்கியராஜ் ஏற்பாட்டில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் உருளையன்பேட்டை தொகுதிகுட்பட்ட காந்தி வீதி, கண்ணையா பிசினஸ் சென்டர் வளாகத்தில் நடைபெற்றது. மருத்துவ முகாமில் உருளையன்பேட்டை தொகுதி கழக செயலாளர் இரா. சக்திவேல் வரவேற்புரை ஆற்றினார்.

தலைமை பொதுக்குழு உறுப்பினர் எஸ். கோபால் முன்னிலையில் நடைபெற்ற மருத்துவ முகாமினை, மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா அவர்கள் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். இந்த முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் அறுவை சிகிச்சை, மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம் மற்றும் இதய நோய் தொடர்பான பரிசோதனைகள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ சேவைகள் மற்றும் மருந்து, மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன. இந்த முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

முகாமை தொடங்கி வைத்து பேசிய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா, இத்தகைய திட்டம் மக்கள் நலப் பணிகள் மூலம், திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து பொதுமக்களின் நலனுக்காக உழைத்து வருகிறது. புதுச்சேரியில் பொதுமக்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சைகள் கிடைப்பதில்லை. கலைஞரின் காப்பீட்டுத்திட்டம் போல புதுச்சேரியில் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. பிரதமர் மோடி கொண்டு வந்த ஆயுஷ்மான் காப்பீட்டுத்திட்டத்தால் புதுச்சேரியில் யாரும் பயன்பெறவில்லை. காப்பீட்டு திட்டத்தில் பயனாளிகளுக்கு கிடைக்கப்பெறும் தொகை அதிகப்படுத்திய போதும், அதனால் எந்த ஆதாயமும் பயனும் மக்களுக்கு இல்லை. ஆனால், திராவிட மாடல் ஆட்சிபுரியும் தமிழ்நாட்டில் தளபதியாரின் வழிகாட்டுதலில் புதுச்சேரி மக்களுக்கு ஆதரவு கரம் நீட்டிய தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நம் மக்களுக்கு இங்கு கிடைக்காத அல்லது மறுக்கப்படும் சிகிச்சைகளுக்கு அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் சிறப்பான நவீன மருத்துவ சிகிச்சையளிக்க முன்வருவதாக உறுதியளித்துள்ளார் என்று குறிப்பிட்டு பேசிய அவர், புதுச்சேரியில் மக்கள் விரும்பும் கழக ஆட்சி உதிக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

மருத்துவ முகாமில் அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில கழக துணை அமைப்பாளர் அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., மாநில கழக பொருளாளர் ஆர். செந்தில்குமார் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மூர்த்தி, நந்தா சரவணன், துணை அமைப்பாளர் தைரியநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜே.வி.எஸ் சரவணா, சக்திவேல், பொதுக்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, பிரபாகரன், செந்தில், அமுதாகுமார், தொகுதி செயலாளர்கள் சீதாராமன், நடராஜன், வடிவேலு, சிவக்குமார், ராஜாராம், ராஜா, ஆறுமுகம், சவுரி, இலக்கிய அணி அமைப்பாளர் சீனு மோகன்தாஸ், சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் ஹாலித், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி ஸ்ரீகாந்த், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் சுமதி, மாணவர் அணி அமைப்பாளர் மணிமாறன், ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் செல்வநாதன், விளையாட்டு மேம்பாட்டு அணி ரவிச்சந்திரன், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் நித்திஷ், முகிலன், கிருபா, தாமரைகண்ணன், ரெமி மற்றும் உருளையின்பேட்டை கழக நிர்வாகிகள் சசிகுமார், மாறன், கிரி, மதிமாறன், கண்ணதாசன், புருஷோத், ஸ்ரீதர், தமிழ்மணி, தேவேந்திரன், ராமு மற்றும் கலிமுல்லா உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
மாலை எக்ஸ்பிரஸ்
• ஞாயிறு • ஏப்ரல் 27, 2025

# சட்ட உதவிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சி




கடலூர், ஏப். 27-

சட்ட பணிகள் ஆணைக்குழு சார்பில் சட்ட உதவிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசரும் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் செயல் தலைவர் திரு.எஸ்.எஸ் சுந்தர் அவர்கள் 68 பயனாளிகளுக்கு ரூ.15.35 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

கடலூர், எஸ்.ஆர். ஜாங்கிட் மண்டபத்தில் சட்ட பணிகள் ஆணைக்குழு சார்பில் நடைபெற்ற சட்ட உதவிகள் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு பேர் ஆட்சியர் மற்றும் பொறுப்பு சொத்து ஆட்சியர் உயர்நீதிமன்றம், சென்னை லிங்கேஸ்வரன், தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் செயலர் சுதா ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவரும் முதன்மை மாவட்ட நீதிபதியுமான சுபத்திரா தேவி ஆகியோர் தலைமையில் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசரும் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் செயல் தலைவருமான எஸ்.எஸ் சுந்தர் 68 பயனாளிகளுக்கு ரூ.15.35 லட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சென்னை உயர்நீதிமன்ற நீதியரசரும் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் செயல் தலைவர் தெரிவித்ததாவது, அனைவருக்கும் சட்டம் என்பது சமம், அனைவருக்கும் நியாயம் கிடைத்திட வேண்டும் என்பதற்காக 1987இல் சட்டப்பணிகள் ஆணையக்குழு ஏற்படுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து மாவட்ட அளவில் சட்டப்பணிகள் ஆணையக்குழு அமைக்கப்பட்டு அனைவருக்கும் நியாயம் கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர் நிகழ்வாக மாற்றுத் திறனாளிகளுக்கும் சமவாய்ப்பு வழங்கிட வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவை சேர்ந்த பார்வைக்குறைபாடுடைய மாற்றுத்திறனாளி ஒருவர் தேர்வின்போது தனக்கு பதிலாக உதவியாளர் மூலம் தேர்வு எழுதுவதற்காக அனுமதி கோரி நீதிமன்றத்தினை நாடியபோது கீழ்நிலை நீதிமன்றங்களில் நிராகரிக்கப்பட்டு, உச்சநீதிமன்றத்திற்கு வழக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு ஒரு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பாக எளியவர்களுக்கும் சமநீதி வழங்கிட வேண்டும் என்பதற்காக அவரது கோரிக்கை ஏற்கப்பட்டது. அமெரிக்காவில் உயர்ந்தார்.

எனவே, மாற்றுத் திறனாளிகளுக்கும் அனைத்து வசதிகளும் கிடைக்கும் பட்சத்தில் கடினமாக உழைத்து நம்மைவிட உயர்ந்த நிலையில் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. பொதுமக்களுக்கு விரைந்து நீதி வழங்கிட வேண்டும் என்பதற்காக மக்கள் நீதிமன்றம் மூலம் வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு வருகின்றன. அரசின் சார்பில் சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டுவரும் நலத்திட்டங்கள் உரிய பயனாளிகளுக்கு கிடைத்திட இதுபோன்ற சட்டப்பணிகள் ஆணையக்குழு முகாம்கள் பயன்படுகின்றன.

தற்போதைய உலகமயமாக்கலை அடுத்து வாகனபெருக்கம், தொழிற்சாலைகள் அதிகரிப்பு போன்ற காரணங்களால் வெப்பமயமாதல் தவிர்க்க இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. இதுபோன்றவற்றை தீர்ப்பதற்காகவும், பசுமை போர்வையினை அதிகரித்திடவும் தூய்மையான காற்றினை உருவாக்கிடவும், மரங்கள் வளர்ப்பது மிகவும் இன்றியமையாததாக உள்ளன. கடந்தாண்டுகளில் மரக்கன்றுகள் நடவுசெய்யும் பணியினை தீவிரபடுத்தியதன் காரணமாக லட்சக்கணக்கான மரக்கன்றுகள் நடவுசெய்யப்பட்டன. இந்தாண்டும் இப்பணிகள் தொடர்ந்து நடைபெற உள்ளது. பொதுமக்கள் தங்களால் இயன்ற அளவு தங்களது வீடுகளில் மரக்கன்றுகளை நடவுசெய்து பராமரித்திட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், கடலூர் மாநகராட்சி ஆணையாளர் அனு, சாக்ஸம் தமிழ்நாடு மாநில தலைவர் சபஷ்ராஜ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மண்ணாடிப்பட்டு தொகுதியில் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் குறைகேட்பு



மண்ணாடிப்பட்டு தொகுதியில் உள்ள உள்துறை அமைச்சர் நமச்சிவாயத்தின், திருக்கனூர் இல்லத்தில் மண்ணாடிப்பட்டு தொகுதி மக்களிடம் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் குறித்து குறைகள் மற்றும் கருத்துக்களை அமைச்சர் நமச்சிவாயம் கேட்டறிந்தார்.

# புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா



புதுச்சேரி, ஏப். 27-

புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்ச்சங்க செயலர் சீனு.மோகன்தாசு வரவேற்புரை ஆற்றினார். தமிழ்ச் சங்க பொருளர் பாவலர் மு. அருள்செல்வம், துணைத் தலைவர் பாவலர் ப.திருநாவுக்கரசு, துணைச் செயலர் பாவலர் தெ. தினகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பாரதிதாசன் போற்றும் பெண்ணியம் என்ற தலைப்பில் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் தமிழ்மாமணி புலவர் ந. ஆதிகேசவனார் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. கவியரங்கில் முனைவர் ஆ. விஜயராணி, முனைவர் லட்சுமி தத்தை, முனைவர் பூங்குழலி பெருமாள், முனைவர் இரா. விசாலாட்சி, முனைவர் பொன்.திலகவதி, சிங்கப்பூர் முனைவர் அருள்ராஜ் ஆகியோர் பங்கேற்று கவிதை பாடினார்.

பாவேந்தரும் தமிழும் என்ற தலைப்பில் பாவேந்தர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு, சமூக நீதிக் கொள்கை, இயற்கை மற்றும் பெண்ணியத்தைப் போற்றிய பெருமைகளும் பாவேந்தர் தமிழுக்கு அளித்த கொடைகள் என்று பல்வேறு சிறப்புகளைப் பற்றி புதுக்கோட்டை யாப்பியல் வித்தகர் முனைவர் ப. செந்தில் முருகன் சிறப்புரையாற்றினார். பாவேந்தர் பெயரன் கலைமாமணி முனைவர் கோ.பாரதி மகிழ்வுரை நிகழ்த்தினார். அயலகத் தமிழர் விருது பெற்ற பிரான்சு நாட்டை சேர்ந்த வழக்கறிஞர் அய் குணசேகரன், தமிழக அரசின் நற்றமிழ்ப் பாவலர் விருது பெற்ற முனைவர் மு.இளங்கோவன், தமிழக அரசின் சிறந்த நூல் பரிசு பெற்ற பாவலர் என். எஸ். கலைவரதன், செவாலியே விருது பெற்ற முனைவர் சு.ஆ.வெங்கட சுப்பராய நாயகர் ஆகியோருக்கு புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி. முத்து புதுவைத் தமிழ்ச்சங்க விருதினை வழங்கி பாராட்டினார். இவ்விழாவில் ஆட்சி குழு உறுப்பினர்கள் கலைமாமணி மா.சு. இராசா, பொறிஞர் மு.சுரேசு குமார், பாவலர் அ.சிவேந்திரன் பாவலர் ர.ஆனந்தராசன் மற்றும் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த கவிஞர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் என ஏராளமான பங்கேற்று சிறப்பித்தனர். விழா முடிவில் தமிழ்மாமணி அ.உசேன் நன்றி கூறினார்,

# தோவாளை பகுதிகளில் வளர்ச்சி திட்டப்பணிகளை ஆட்சியர் ஆய்வு

கன்னியாகுமரி, ஏப். 27-

கன்னியாகுமரி மாவட்ட தோவாளை வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு துறை வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சார்ந்த அழகுமீனா செய்தியாளர்களுடன் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில், கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டி அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பிரசவ முன்கவனிப்பு பகுதி, பின்கவனிப்பு பகுதி ஆகியவற்றை ஆய்வு செய்து அங்கு தாய்மார்களிடம் வழங்கப்படும் மருத்துவசிகிச்சைகள் குறித்து கேட்டறியப்பட்டது. மருத்துவமனையில் வளமிகு வட்டார திட்டத்தின் கீழ் பிரசவ வார்டு பகுதியில் தாய்மார்களுக்கும் அவர்களுடன் துணைக்கு இருப்பவர்களுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இம்மருத்துவமனையில் புதிதாக அமையவுள்ள அறுவை அரங்கிற்கான ஆயத்த பணிகள் குறித்து மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களிடம் கேட்டறிப்பட்டது.

மேலும் செவிலியர்கள் மற்றும் மருத்துவர்களிடம் இம்மருத்துவமனையை நாடி வரும் கர்பிணிப்பெண்களுக்கு சிறப்பான சிகிச்சையளிக்க வேண்டும் எனவும், கர்பிணிப்பெண்கள் மற்றும் உடன் இருப்போரிடம் கனிவுடன் நடந்துகொள்ள வேண்டும் எனவும், இங்கு நடைபெறும் பிரசவங்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் எனவும், ஆபத்து அறிகுறி காணப்படும் கர்ப்பிணி தாய்மார்களை பிரசவ தேதிக்கு முன்பாகவே மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டும் எனவும், பிரசவித்த தாய்மார்களுடன் துணைக்கு இருக்கும் ஒருநபருக்கு மருத்துவமனை உணவு வழங்க ஏற்பாடு செய்யவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து இறச்சகுளம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இறச்சகுளம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் 11 உறுப்பினர்கள் 170 லிட்டர் பால் வழங்கி வருகிறார்கள். சங்கத்தின் பால் உற்பத்தியை அதிகரித்து ஆவினுக்கு அதிக அளவில் பால் வழங்கவும், பால் உபபொருட்கள் விற்பனை செய்யவும், உறுப்பினர்களுக்கு தேவையான கறவை மாட்டுக்கடன்கள் பெற்று வழங்கவும், மாட்டுத்தீவனம் மற்றும் தாது உப்புகலவை தட்டுப்பாடின்றி வழங்கவும் கூட்டுறவு சங்க செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து உறுப்பினர்களுக்கு தேவையான கடன் வசதி மற்றும் இடுபொருள்களுக்கான தேவையினை பூர்த்தி செய்து பால் உற்பத்தியினை அதிகரிக்குமாறு அறிவுறுத்தினார்கள். சங்கங்களிலிருந்து ஆவினுக்கு 10000 லிட்டர் பால் உடனடியாக பெறப்படவேண்டுமென இலக்கு நிர்ணயித்து செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டது. மேலும் அனைத்து சங்கங்களிலும் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனை நிலையத்தினை உடனடியாக துவங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. கால்நடை துறை மற்றும் இதர தொடர்புடைய துறைகளுடன் இணைந்து உறுப்பினர்களுக்கான சேவைகளை தங்குதடையின்றி வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் தோவாளை வட்டத்திற்குட்பட்ட வெள்ளமடம் குலசேகரன்புதூர் பகுதியில் ரூ.3.79 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதோடு, கட்டடத்தின் அடிப்படை வசதிகள் குறித்தும், உறுதித்தன்மை குறித்து துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. தொடர்ந்து ஒடுத்தளத்தின் தரம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு தெரிவித்தார்கள்.

ஆய்வில் பொதுப்பணித்துறை கட்டிடம் மற்றும் பராமரிப்பு உதவி செயற்பொறியாளர் முருகேசன், நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலர் சக்திவேல், கன்னியாகுமரி ஒன்றிய பால் கூட்டுறவு சங்க பொது மேலாளர் மகேஷ்வரி, வட்டார மருத்துவ அலுவலர், ஒன்றிய பால் கூட்டுறவு சங்க அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



# குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை

## ஆட்சியர் பிருந்தாதேவி தகவல்



**சேலம், ஏப். 27-**

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த மாதாந்திர ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப்பின், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் எந்த வகையான வன்முறையும் அரசு பொறுத்து கொள்ளாது எனவும், இவர்களுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அந்தவகையில் சேலம் மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக காவல்துறை, மாவட்ட சமூக நலத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அடங்கிய குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவானது மாவட்டத்தில் பெறப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்தும், அதன்மீது உடனடியாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மாதந்தோறும் நடைபெறும் கூட்டங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான உதவி சேவை மையம் சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் அறை எண்:120இல் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. மேலும், குழந்தை உதவி மையம் புறத்தொடர்பு பணிகள் சேலம் பதிய பேருந்து நிலையத்திலும் செயல்பட்டு வருகிறது. இது தவிர 1098 என்ற எண்ணில் குழந்தைகளுக்கு எதிரான குற்ற செயல்கள் குறித்த புகார்களை வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், கடந்த ஜனவரி 2025 முதல் தற்போது வரை குழந்தைகள் உதவி மையத்திற்கு 575 அழைப்புகள் மற்றும் சந்திப்புகள் வரப்பெற்று அதன் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெறப்பட்ட அழைப்புகளில் 212 அழைப்புகள் குழந்தைகள் நலக்குழு மூலம் விசாரிக்கப்பட்டுத் தேவையான மறுவாழ்வு வசதிகள் அவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 363 அழைப்புகளுக்கு உடனடியாக தொடர்புடைய அலுவலர்கள் நேரில் சென்று, குழந்தைகளை சந்தித்து பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மேலும், மார்ச் 2025இல் குழந்தை திருமணம் தொடர்பாக மாவட்ட அளவில் 28 புகார்கள் வரப்பெற்றது. இதன் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 14 திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு, இதில் ஈடுபட்ட தொடர்புடையவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் வரபெற்ற அழைப்புகளில் 13 அழைப்புகள் குழந்தைகள் திருமணங்கள் என தவறான தகவல் என நேரடி ஆய்வில் அறியப்பட்டுள்ளது. ஒரு புகார் பிற மாவட்டம் சார்ந்தவை என்பதால் நடவடிக்கைக்காக தொடர்புடைய மாவட்டங்களுக்கு புகார்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு குழந்தை திருமணம் மற்றும் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, மாவட்டத்தில் குழந்தைகள் திருமணம் தொடர்பாக வரப்பெற்ற அனைத்து புகார்களுக்கும் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், மாவட்ட சமூக நலத்துறை. காவல்துறை, தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து ஒவ்வொரு மாதமும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் நிலை குறித்து அறிக்கை அளித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட குழந்தைகள் நலக்குழு கூடுதல் துணை காவல் கண்காணிப்பாளர் அண்ணாதுரை, மாவட்ட சமூக நல அலுவலர் கார்த்திகா, மாவட்ட மனநல ஆலோசகர் விவேகானந்தன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் சுகந்தி, மாவட்ட குழந்தைகள் நலக்குழு தலைவர் ஜெயந்தி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்




**நாமக்கல், ஏப். 27-**

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தாவது, நாமக்கல் மாவட்டத்தின் ஆண்டு இயல்பு மழை அளவு 716.54 மி.மீ. தற்போது வரை 85.09 மி.மீ. மழை பெறப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் முடிய இயல்பு மழையளவை விட 9.96 மி.மீ. அதிகமாக மழை பெறப்பட்டுள்ளது. 2024–25 ஆம் ஆண்டில் மார்ச் 2025 மாதம் வரை நெல் 10,422 எக்டர். சிறுதானியங்கள் 88,223 எக்டர் பயறு வகைகள் 11,868 எக்டர். எண்ணெய் வித்துக்கள் 32,066 எக்டர், பருத்தி 1,892 எக்டர் மற்றும் கரும்பு 10,962 எக்டர் என மொத்தம் 1,55,433 எக்டரில் வேளாண் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தோட்டக்கலைப் பயிர்களில் தக்காளி 606 எக்டர். கத்திரி 404 எக்டர், வெண்டை 347 எக்டர், மிளகாய் 256 எக்டர், மரவள்ளி 19,663 எக்டர், வெங்காயம் 4,617 எக்டர், மஞ்சள் 1,951 எக்டர் மற்றும் வாழை 2,694 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் விதைகள் மற்றும் உரங்கள் வேளாண்மை விரிவாக்க மையங்கள். தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மேலும், சேந்தமங்கலம் வட்டம், கல்குறிச்சி ஊராட்சியை சேர்ந்த விவசாயி தனராஜிக்கு கிழங்கு வெட்டும் இயந்திரம் கண்டுப்பிடித்தமைக்கு உயர்கல்வித்துறையின் அறிவியல் நகரம் சார்பில் வழங்கப்பட்ட ஊரக கண்டுப்பிடிப்பாளார் விருதினை நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் வாழ்த்து பெற்றார்.

நீர், காற்று, நிலம் மாசில்லா தமிழகத்தை உருவாக்கும் நோக்கில் நெகிழி பைகளைத் தவிர்த்து துணி பைகளை பயன்படுத்தும் நோக்கில் மஞ்சப்பை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 150க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் உமாவிடம் விவசாய பெருமக்கள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சுமன், மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மாவட்ட வருவாய் அலுவலர், செயலாட்சியர் குப்புசாமி, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) சரவணன், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட் இணைப் பதிவாளர், மேலாண்மை இயக்குநர் யசோதாதேவி, வேளாண்மை இணை இயக்குநர் பெ.கலைச்செல்வி, நாமக்கல் சரக கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் ஜேசுதாஸ், திருச்செங்கோடு சரக கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் கிருஷ்ணன், தோட்டக்கலைத் துணை இயக்குநர் புவனேஷ்வரி, வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் பத்மாவதி, வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம்) நாசர். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராமச்சந்திரன் மற்றும் இதர துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

**தென்காசி, ஏப். 27-**

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, தென்காசி மாவட்டத்தில் 2024 – 2025 ஆம் ஆண்டில் வரை ஒத்திசைவு சாகுபடி செய்யப்பட்ட நெல் 44466 ஹெக்டேர், சிறுதானியங்கள் 24257 ஹெக்டேர், பயறு வகைகள் 29525 ஹெக்டேர் பருத்தி 1958, கரும்பு 1388 ஹெக்டேர், எண்ணெய் வித்து 1664 ஹெக்டேர், மலைப் பயிர்கள் 13871 ஹெக்டேர், பழங்கள் 10139 ஹெக்டேர், காய்கறிகள் 2119 ஹெக்டேர், வாசனைப் பயிர்கள் 721 ஹெக்டேர், மருத்துவப் பயிர்கள் 3 ஹெக்டேர், பூக்கள் 559 ஹெக்டேர் பரப்பும் ஒத்திசைவு செய்யப்பட்டது. மழையளவு, நீர் இருப்பு விபரம் மற்றும் இடுபொருட்கள் இருப்பு விபரம் அனைத்து விவசாயிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது என தெரிவித்தார்.

மேலும், தென்காசி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தனித்துவமான அடையாள எண் வழங்கும் பணி நடைற்று வருகின்றது, இதுநாள் வரை பதிவு செய்யாத விவசாயிகள் தங்களின் நிலவுடமை விபரங்களை பதிவு செய்து தனித்துவமான அடையாள எண்ணை பெற்றுக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் விவசாயிகளுக்கு அறிவுறுத்தினார்.



வேளாண்மைத் துறை சார்பில், கடையம் வட்டார வேளாண்மைத் துறையினர் மூலம் விவசாய தொழில் நுட்ப மேலாண்மை முகமை (அத்மா) திட்டத்தின் கீழ் 01 பயனாளிக்கு ரூ.4000 மானியத்தில் சூரிய விளக்கு பொறியினையும், 01 பயனாளிக்கு ரூ.4000 மானியத்தில் மின்கல தெளிப்பானையும் மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

கடையம் வட்டார வேளாண்மைத் துறையினர், ஆலங்குளம் மற்றும் கடையம் வட்டார தோட்டக்கலைத் துறையினர், வ.உ.சிதம்பரனார் வேளாண்மைக் கல்லூரி மற்றும் எஸ்.தங்கப்பழம் வேளாண்மைக்கல்லூரி கிராம தங்கல் திட்ட மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த கண்காட்சியினை தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துவக்கி வைத்து பார்வையிட திரளான விவசாயிகளும் கண்டு பயனடைந்தனர்.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 160 மனுக்களுக்கு 15 நாட்களுக்குள் விரிவான மற்றும் விவசாயிகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய பதிலை வழங்குமாறு அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் மகாதேவன், வேளாண்மை துணைஇயக்குநர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) கனகம்மாள், தோட்டக்கலை துணை இயக்குநர் ஜெஸிமாபானு, துணை இயக்குநர், வேளாண் வணிகம் மற்றும் விற்பனை வசந்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற் பொறியாளர் சங்கர், தென்காசி வனக்கோட்ட உதவி வனக் காவலர் சி. நெல்லைநாயகம், முதுநிலை மண்டல மேலாளர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ரியாஜ் அகமது மற்றும் அனைத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள், அனைத்து வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், அனைத்து துறை அலுவலர்கள், அனைத்து விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாய பெருமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# ஊடக மக்கள் சங்கம் சார்பில் முப்பெரும் விழா

**திண்டுக்கல், ஏப். 27-**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் தமிழ்நாடு ஊடக மக்கள் சங்கம் முப்பெரும் விழா நடந்தது. தமிழ்நாடு ஊடக மக்கள் சங்கம் மாநிலத் தலைவர் புருசோத்தமன் தலைமையில் நிலக்கோட்டை காவல்துறை துணை கண்காணிப்பாளர் செந்தில்குமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஊடக மக்கள் சங்கம் மாநில பொருளாளர் தங்கப்பாண்டியன், தமிழ்நாடு ஊடக மக்கள் சங்கம் மாநில செயலாளர் அசோக் குமார், முன்னிலையில் முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு ஊடக மக்கள் சங்க மாநில துணைச் செயலாளர் வழக்கறிஞர் ரவிச்சந்திரன். விழாவை சிறப்பித்தார். அனைத்து மாவட்ட மாநில நிர்வாகிகளுக்கு விருதுகள் வழங்கி விழா சிறப்பாக நடைபெற்றது. மாநில நிர்வாக குழு உறுப்பினர் செல்வம் திண்டுக்கல் மாவட்ட தலைவர் பாண்டித்துரை, ஶ்ரீராம், வெங்கடேஷ். தமிழ்நாடு ஊடக மக்கள் சங்கம் மாநில நிர்வாகிகள் அனைத்து மாவட்ட மாவட்ட நிர்வாகிகள். அனைத்து தாலுகா நிர்வாகிகள், 34 மாவட்ட நிர்வாகிகள் தமிழ்நாடு ஊடக மக்கள் சங்க உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியை நிலக்கோட்டை தாலுகா செயலாளர் பட்டிவேல் மற்றும் நிலக்கோட்டை தாலுகா நிர்வாகிகள் முப்பெரும் விழாவை ஏற்பாடு செய்திருந்தனர்.



E-mail:maalaiexpresspdy@gmail.com
● ஞாயிறு ● ஏப்ரல் 27, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# மதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



கோவை, ஏப். 27-

இஸ்லாமியர்களுக்கு எதிரான வக்பு சட்டத்தை மத்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டத்தை மத்திய அரசு திரும்ப பெற வலியுறுத்தியும், தமிழக ஆளுநர் ஆர்என் ரவியை பதவி விலக கோரியும் தமிழகம் முழுவதும் மதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ உத்தரவின்பேரில் தமிழகம் முழுவதும் மதிமுக நிர்வாகிகள் தலைமையில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு, கோவை மண்டல மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக மத்திய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தினை மதிமுக கழக அவை தலைவர் ஆடிட்டர் அர்ஜூனராஜ் தலைமை தாங்கினார். மதிமுக கழக பொருளாளர் பொறியாளர் செந்திலதிபன் கண்டன உரையாற்றினார். ஆட்சி மன்ற குழு செயலாளர் டாக்டர் கிருஷ்ணன், உயர்நிலை குழு உறுப்பினர் ஆர் ஆர் மோகன் குமார், விவசாய அணி செயலாளர் அரங்கசாமி, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், கோவை மாநகர் மாவட்ட செயலாளர் கணபதி செல்வராசு வரவேற்புரையாற்றினார். மேலும் இந்த நிகழ்ச்சியில் பிஎன் ராஜேந்திரன், குகன் மில் செந்தில், அரிமா நாகராஜ், மதிமுக கவுன்சிலர்கள் சித்ரா வெள்ளியங்கிரி, அன்பு என்கிற தர்மராஜ் உட்பட பலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# தென்காசி மாவட்டத்தில் வளர்ச்சித்திட்ட பணிகளை ஆட்சியர் ஆய்வு



தென்காசி, ஏப். 27-

தென்காசி மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை செய்தியாளர்களுடன் இணைந்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டம் செங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் புளியரை ஊராட்சியில், ஊராட்சி ஒன்றியஒன்றியதொடக்கப்பள்ளியில் ரூ.67 லட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக 4 வகுப்பறைகள் கட்டும் பணிகளையும், புதியதாக ரூ.66.75 லட்சம் மதிப்பீட்டில் சமுதாய கிணறு வெட்டும் பணியினையும், கற்குடி ஊராட்சியில் ரூ. 22 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய நூலகத்தினை பார்வையிட்டும், இலத்தூர் ஊராட்சியில் ஊரக வீடுகள் பழுது பார்க்கும் திட்டத்தின் கீழ் ரூ.1.5 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயனாளியின் வீட்டினை பார்வையிட்டும், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயனாளியின் வீட்டினை பார்வையிட்டும், ரூ.1.20 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார மையத்தினை பார்வையிட்டும். கிளாங்காடு ஊராட்சியில் ரூ.42.65 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள கிராம ஊராட்சி செயலகத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது..

தொடர்ந்து, கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் ஊர்மேலழகியான் ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.3.5 லட்சம் மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்யப்பட்ட பள்ளிக் கட்டிடங்களை பார்வையிட்டும், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.4.5 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறிய சமுதாய சுகாதார வளாகத்தினை பார்வையிட்டும், கூட்டுறவு வங்கி அருகே ரூ.16.55 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டிடத்தினையும், வேலாயுதபுரம் ஊராட்சியில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சிறு பாலத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம் பொய்கை ஊராட்சியில் ரூ.237.650 லட்சம் மதிப்பீட்டில் திரிபுரசுந்தரபுரம் முதல் ஆவுடையாள்புரம் வரை செல்லும் சாலை அமைக்கும் பணி குறித்தும், ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திற் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் வட்டார பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 3.90 லட்சம் நாற்றாங்கால் பண்ணையினையும் அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என உரிய அலுவ லர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். இந்த ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்ணான்டோ, செங்கோட்டை ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் திருமலைச்செல்வி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) ராமசுப்பிரமணியன் மற்றும் அனைத்து செய்தியாளர்கள், ஒளிப்பதிவாளர்கள், புகைப்படக்காரர்கள், அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# நியூயார்க்கில் நடந்த பெண்கள் கருத்தரங்கத்தில் ஜிஆர்ஜி பள்ளி முதல்வர் பங்கேற்பு



கோவை, ஏப். 27-

69வது பெண்கள் நிலை குறித்த கருத்தரங்கம் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் தலைநகரமான நியூயார்க்கில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு சார்பாக கோவை ஜிஆர்ஜி மாடர்ன் ஸ்காலர்ஸ் பள்ளியின் முதல்வர் உமா மாணிக்கம் சர்வதேசப் பெண்கள் மேம்பாடு மற்றும் மாற்றத்திற்கான பிரதிநிதியாக பங்கேற்றார். இதில் உலகத்தின் பல நாடுகளிலிருந்தும் கல்வியாளர்கள், அமைச்சர்கள், அறிவியல் அறிஞர்கள் வழக்குரைஞர்கள், அரச குடும்பத்தினர், கொள்கை வகுப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் மாணவர்கள் மற்றும் பெண்களின் வளர்ச்சிக்கான ஆக்கபூர்வமான திட்டங்கள் குறித்து கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் தென் கொரிய அமைப்பு மற்றும் கோவை ஜிஆர்ஜி மாடர்ன் ஸ்காலர்ஸ் பள்ளி இணைந்து மாணவர்களுக்கான கலாச்சார பரிமாற்ற நிகழ்ச்சிகள், தலைமை பண்பு மேம்பாட்டிற்கான பயிற்சிகள் உடல் மற்றும் மனநலம் சார்ந்த போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டு அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்டன. இதுகுறித்து ஜிஆர்ஜி மாடர்ன் ஸ்காலர்ஸ் பள்ளி முதல்வர் உமா செய்தியாளர்களிடம் கூறுகையில், அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் தலைநகரமான நியூயார்க்கில் கடந்த மாதம் 69வது பெண்கள் நிலை குறித்த ஆணையத்தில் கலந்து கொண்டமைக்கு பெருமிதம் அடைகிறேன். மேலும் கருத்தரங்கத்தில் இடம்பெற்ற ஆக்கபூர்வமான அனுபவங்களையும் செயல் கூறுகளையும் பெண்ணினத்திற்கு பெருமைகூட்டும் வகையில் எடுத்துரைக்க எனக்கு துணையாக நின்றது ஜிஆர்ஜி நிறுவனம். ஒரு நிறுவனத்தின் வளர்ச்சி என்பது அதில் பங்கு கொண்ட ஒவ்வொரு தனிநபரின் வளர்ச்சி என்பதற்கேற்ப என்னை இந்த நிகழ்வில் பங்கேற்க வாய்ப்பளித்தமைக்கு எனது ஜி ஆர் ஜி நிர்வாகத்திற்கு பணிவன்புடன் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறினார்.

# தனியார் வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு நியமன ஆணை: கன்னியாகுமரி ஆட்சியர் வழங்கினார்



கன்னியாகுமரி, ஏப். 27-

கன்னியாகுமரி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நாகர்கோவில் பயோனியர் குமாரசுவாமி கல்லூரியில் நடைபெற்றது.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா கலந்துகொண்டு, தேர்வு செய்யப்பட்ட மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு பணி நியமன ஆணையினை வழங்கி பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டிற்குட்பட்ட நகர்புற மற்றும் கடைகோடி கிராமங்களில் உள்ள படித்த இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களுக்கு பொது நிறுவனங்கள், தனியார் தொழில்நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் வேலை வழங்கும் நோக்கில் கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்புத்துறை, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம். நான் முதல்வன் மற்றும் மாவட்ட திறன் மேம்பாட்டு நிறுவனம் வாயிலாக கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி தகுதியானவர்களுக்கு உடனடியாக பணி ஆணை வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் நலனை கருத்தில் கொண்டு மாவட்ட நிர்வாகம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம், மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நாகர்கோவில் பயோனியர் குமாரசுவாமி கல்லூரியில் நடைபெற்றது.

இம்முகாமில் டிவிஎஸ். டாடா பவர். கேப் ஸ்டார்ட், ஃபின்ஒஎஸ், அக்லூட் இன்ஜினியரிங் அண்ட் இன்ஃப்ராஸ்ட்ரக்சர், கம்மா போன்ற முன்னணி தனியார் நிறுவனங்கள், கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் பிற மாவட்டங்ககளில் உள்ள 20க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டார்கள். இந்நிறுவனங்கள் மென்பொருள் பயிற்சியாளர், டெவலப்பர். ஹிமி/ஹிஙீ வடிவமைப்பு. ஜாவா/றிபிறி முழு அடுக்கு மேம்பாடு, டேட்டா சயின்ஸ், கிமி, டிஜிட்டல் மார்க்கெட்டிங், டிசைனர், வணிக மேம்பாட்டு நிர்வாகி, சந்தைப்படுத்தல் நபர், வீடியோ எடிட்டிங், கிராஃபிக் டிசைனிங், மார்க்கெட்டிங், அப்ரெண்டிஸ்ஷிப், பில்லிங், கோடவுன் பணியாளர்கள், ஹவுஸ் கீப்பிங், வணிக மேம்பாட்டு பணி, நிர்வாக ஒருங்கிணைப்பாளர், வாடிக்கையாளர் தொடர்பு, உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களுக்கு மாற்றுத்திறன் கொண்ட பணியாளர்களை தேர்வு செய்து, திறன் பயிற்சியும் வழங்குவார்கள்.

அதனடிப்படையில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் 231 மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டார்கள். அவர்களில் 25 மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. இந்த வேலைவாய்ப்பு முகாமில் பணி ஆணைகளைப் பெற்றுள்ள அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள். முகாமில் கலந்துகொண்டுள்ள நிறுவனங்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். பணி நியமன ஆணை பெற்றவர்கள் இதோடு நின்று விடாமல் மேலும் வெற்றியடைய வேண்டுமென வாழ்த்துக்கிறேன். இவ்வாறு பேசினார்கள்.

நடைபெற்ற முகாமில் திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் பத்ஹூ முகம்மது நசீர், மாவட்ட மாற்றுத்திறன் நல அலுவலர் தினேஷ் சந்திரன், மாவட்ட திறன் மேம்பாட்டு அலுவலக உதவி இயக்குநர் லட்சுமிகாந்தன், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்க திருநெல்வேலி மண்டல திட்ட மேலாளர் ராகுல், கோயம்புத்தூர் மண்டல திட்ட இணை மேலாளர் ராஜசேகர், பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த மனித வள அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# ஸ்ரீகருப்பண்ணசாமி கோவிலில் 45ம் ஆண்டு சித்திரை திருவிழா



கோவை, ஏப். 27-

கோவை கெம்பட்டி காலனியில் உள்ள ஸ்ரீ பொன்னூற்று பத்ரகாளியம்மன் ஸ்ரீ கருப்பண்ணசாமி கோவில் 45ம் ஆண்டு சித்திரை குண்டம் திருவிழா தலைவர் ஆர்.ராஜீவ் தலைமையில் செயலாளர் எஸ்.புனித்குமார், பொருளாளர் எ.சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் மிக சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக வாசியோக மௌனகுரு பாரதி ராஜா சுவாமிகள், சிவ ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி சுவாமிகள் (பைரவர் பீடம்), சி.என் சண்முகவர்மா, தர்மலிங்கம், சி.என்.குணசேகரன், எஸ்.வெங்கடேஷ், சந்திரிகாமணி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியை கெம்பட்டி காலனி சுற்றுவட்டார பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் விரதமிருந்து குண்டம் இறங்கி சாமி தரிசனம் செய்து தங்களது வேண்டுதல்களை நிறைவேற்றினர்.

முன்னதாக ஸ்ரீ பொன்னூற்று பத்திரகாளியம்மன் மற்றும் ஸ்ரீ கருப்பண்ண சாமி சிறப்பு அலங்காரத்தில் திருவீதி உலா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பி. ஆனந்தன், என்.சதீஷ், என்.சண்முகசுந்தரம், எஸ்.ரிஷியப்பன் கோவில் பூசாரி ஜீ.சங்கர், கோவில் நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டு அம்மனை தரிசித்து அருள்பெற்றனர்.

# நள்ளிரவில் இளம்பெண், பெற்றோரை மிரட்டிய சிறுவன் உட்பட 3 பேர் கைது

காரைக்கால், ஏப். 27-

காரைக்கால் ஆசிரியர் நகரில் நள்ளிரவில் இளம் பெண் மற்றும் பெற்றோரை மிரட்டிய 17 வயது சிறுவன் உட்பட 3 பேர் மீது நகர போலீசார் 4 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து கைது செய்தனர்.

காரைக்கால் ஆசிரியர் நகர் வேலன் மணி காலனி முதல் குறுக்கு தெருவை சேர்ந்தவர் குமரதேவன். இவர் பெயிண்டர் ஆக வேலை செய்து வருகிறார். இவரது மனைவி அலமேலு, இவர் தனியார் ஜவுளி கடையில் வேலை செய்து வருகிறார். இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். திவ்யா ஐடிஐ முடித்துவிட்டு வீட்டில் உள்ளார். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர், குமரதேவன் காரைக்கால் கீரைத்தோட்டத்தில் உள்ள வாடகை வீட்டில் வசித்த போது, காரைக்கால் திருநகரை சேர்ந்த 17 வயது சிறுவன் (ஜெய கிஷோர்) அடிக்கடி அவரது பாட்டி வீட்டுக்கு வந்து செல்லும்பொழுது அலமேலு பார்த்திருக்கிறார். இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு, குமரதேவன் வீட்டு கதவை மர்ம தட்டியுள்ளனர் அப்போது குமரதேவன் மற்றும் அலமேலு யார் கதவை தட்டுவது என்று கேட்ட பொழுது, யாரும் பதில் சொல்லவில்லை. தொடர்ந்து குமரதேவன் கதவை திறந்த பொழுது, திருநகரை சேர்ந்த 17 வயது சிறுவன், திரௌபதி அம்மன் கோவில் தெருவை சேர்ந்த மணிகண்டன் (22) வலத்தெருவை சேர்ந்த சதீஷ் (23) ஆகிய 3 நபர்கள் நின்று கொண்டிருந்தார்கள். குமரதேவன் ஏன் கதவை தட்டினாய் என கேட்டதற்கு, அதெல்லாம் உன்னிடம் சொல்ல முடியாது . உன் மகள் திவ்யாவை வெளியே வரச்சொல். அவளிடம் பேச வேண்டும். என்று 17 வயது சிறுவன் கூறியதாக கூறப்படுகிறது. அதற்கு குமரதேவன் அதெல்லாம் வர சொல்ல முடியாது என்ன கூறிய பொழுது, மணிகண்டன் என்பவர் அங்கிருந்த மரக்கட்டையால் குமரதேவனை தாக்கியுள்ளார். அவரை தடுக்க வந்த அலமேலுவையும் அருகில் இருந்த 17 வயது சிறுவன் மற்றும் சதீஷ் ஆகியோர் ஆபாசமாக திட்டி தாக்கியுள்ளனர். தொடர்ந்து அவர்கள் சத்தம் போடவே அக்கம் பக்கத்தினர் கூடியுள்ளனர்.

இதை பார்த்த 3 நபர்களும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர். இதுகுறித்து அலமேலு நேற்று முன்தினம் பிற்பகல் காரைக்கால் நகர காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில், போலீசார் 17 வயது சிறுவன் உட்பட 3 நபர்கள் மீது 4 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து கைது செய்துள்ளனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007



# பஹல்காம் தாக்குதல் பயங்கரவாதிகளுக்கு கடுமையான பதிலடி கொடுக்கும்-மோடி

# திருப்பதி மலைப்பாதையில் கட்டுக்கடங்காத பக்தர்கள் கூட்டம்

# காஷ்மீரில் மேலும் ஒருவர் சுட்டுக்கொலை


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 27-4-2025 ஞாயிற்றுக்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்